ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1766/5 - 2012 ජූලි මස 11 වැනි බදාදා - 2012.07.11

*1766/5 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படுகின்ற விசாரணை*

*வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி, மற்றும் திட்டமிடல், நீதி, சமாதானம், உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக, மனிதவள, கல்வியும் கலாசார நடவடிக்கையும், காணி, சூழல், சுற்றுலா, முதலீடு, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கல் விடயப் பொறுப்புடைய அமைச்சர் விஜேசிங்ஹ ஹெட்டி அச்சி முதியன்சேலாகே அதுல சரத் குமார விஜேசிங்ஹ ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 185 ஆம் பிரிவில் 2 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு ஒழுங்கமைய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நியமிப்பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதிமன்ற நீதிவான் ஓ. டபிள்யூ. ஓ. பி. வீரசேன அவர்கள் தனியாள் பரிசீலனை ஆணைக்குழுவினால் கீழ் காணப்படும் குற்றங்களில் உள்ள பிழையினால் திரு. சேனாநாயக முதியன்சேலாகே பந்துல புஸ்பகுமார சேனாநாயக அவர்களினால் மஹவ பிரதேச சபையின் "தலைவர்" தலைவராக இருக்கையில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் செய்யப்பட்டுள்ளாரா என்பது பற்றி பரிசீலிக்கப்பட்டது.*

*அவ்வாறு பரிசீலிக்கப்பட்ட குற்றங்கள் -*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி 1717/18 இலக்க மற்றும் 2011.08.03 ஆந் திகதியுடைய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள்.*

I. *2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் இதுகால வரை மஹவ பிரதேச சபையின தலைவராக இருக்கையில் மஹவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் கட்டமைக்கப்பட்டுள்ள கட்டிடம் சம்பந்தமாக கட்டிட விண்ணபத்திரங்களை அனுமதிக்கும் போது வீதி வரைபு சான்றிதழினை வழங்குவதற்காக 2011.05.03 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபையின் பற்றுச்சீட்டு இலக்கம் 79488 மூலம் ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தைந்து ரூபா (ரூபா 1,955.00) தொகையை அடவரல மஹவவில் வசிக்கும் எம். ரி. ஜலீல் என்பவரிடத்தில் வடமேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனத்தின் ஆணையாளரின் 2010.07.27 ஆந் திகதி ப. பா. கொ/சுற்று நிருபம் இலக்கம் 1 /2010 ஆலோசனைகளுக்கு நேர்மாறாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தலினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும் /அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல் -*

II. *2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் 2011.06.24 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி வரை மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் மஹவ பிரதேச சபைக்கு தேவையான எழுது கருவிக்காக 2011.04.21 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் 435 ஆம் இலக்க கொடுப்பனவு பற்றுச்சீட்டினால் மஹவ பிரதேச சபையின் பொது நிதியில் இருபத்தி இரண்டாயிரத்து இருநூற்றி நாற்பத்தைந்து ரூபா (ரூபா 22,245.00) தொகையை பிரதேச சபையின் முறையான சட்டத்திட்டங்களுக்கும் கேள்வி*

கோரலில் இருந்து தவிர்த்தும் மஹாவ முகவரியில் கே. எம். அருண புஸ்பகுமார என்பவருக்கு பெற்றுக் கொடுத்தலினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 174 ஆம் பிரிவிற்கு நேர்மாறாக செயல்பட்டதனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

III. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் 2011.06.24 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி வரை மஹாவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் மஹாவ பிரதேச சபையின் அம்பன்பொல முன் பள்ளியில் கொடுப்பனவு அடிப்படையில் சேவை செய்கின்ற ஐ. எம். எஸ். கே. ஹேரத் என்ற முன்பள்ளி ஆசிரியை 2011.03.01 ஆந் திகதி தொடக்கம் 2011.04.27 ஆந் திகதி வரை சேவைக்கு சமுகம் தராமல் அந்த காலத்திற்கு உரிய 2011.05.10 மஹாவ பிரதேச சபையின் பொது நிதியில் பற்றுச்சீட்டு இலக்கம் 564 மூலம் நான்காயிரத்து அறுநூறு ரூபா (ரூபா 4,600.00 ) அல்லது அதற்கு அண்மித்த தொகையை கொடுப்பனவாக 2011.05.10 ஆந் திகதி அதற்கு அண்மித்த திகதியில் வழங்குதலினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட நிதி மற்றும் நிருவாக சட்டம் 103 இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களை வழிநடத்தாமல் செலுத்தியதனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

IV. 2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் இதுகால வரை மஹாவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் மஹாவ பிரதேச சபையின் கொடுப்பனவு அடிப்படையில் திருமதி ஐ. எம். எஸ். கே. ஹேரத், திருமதி எல். எஸ். ரேணுகா தமயந்தி, திருமதி ஆர். எம். மல்ஹா ஹர்சணி முன் பள்ளி ஆசிரியைகளாக மற்றும் திருமதி மாலா எஸ். ரிகிரி குமாரியை கணினி இயக்குநராக சேர்த்துக் கொண்டு கொடுப்பனவு செலுத்தும் போது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19 (1) (i) ஆம் பிரிவிற்கு நேர்மாறாக நடைமுறைப்படுத்தியதனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும் அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு /பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

V. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் இது வரை மஹாவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் சபைக்கு வருகை தந்த பிரபுகளுக்கு உபசாரம் செய்வதற்காக மஹாவ பிரதேச சபையின் முறையான சபை நியதிகளுக்கு நேர்மாறாகவும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை இடைநிலை சட்டதிட்டங்களின் இரண்டாம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 132 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண விடயப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களின் அனுமதியின்றி மஹாவ ஹோட்டல் சாந்தி நிறுவனத்திற்கு 2011, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹாவ பிரதே சபையின பொது நிதியில் இருபதாயிரத்து எண்ணூற்றி இருபத்தி ஏழு ரூபா (ரூபா 20,827.00 ) தொகையை செலுத்துவதினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

VI. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் இது வரை மஹாவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011, ஏப்பிறல் 25 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் இலக்கம் 68, மெலிபன் வீதி, கொழும்பு 11, சேசத் இலெக்ரிக் கம்பனி நிறுவனத்திற்கு மஹாவ பிரதேச சபையின் முறையான சபை நியதிகளுக்கு நேர்மாறாக மஹாவ பிரதேச சபை அதிகார பிரிவில் வீதி விளக்கு புனரமைப்பிற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட வீதி விளக்கு உபகரணம் வழங்கலுக்காக மஹாவ பிரதேச சபை பொது நிதியில் முப்பத்தி எட்டாயிரம் ரூபா (ரூபா38,000.00) தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185(1)(அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

VII. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் இது வரை மஹாவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.06.01 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் இலக்கம் 68, மெலிபன் வீதி, கொழும்பு - 11 சேசத் இலெக்ரிக் கம்பனி நிறுவனத்திற்கு மஹாவ பிரதேச சபையின் முறையான சபை நியதிகளுக்கு நேர்மாறாக 2011.03.01 ஆந் திகதி கேள்விக் குழுவின் அனுமதியின்றி மஹாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் வீதி விளக்கு புனரமைப்பதற்கு பெற்றுக் கொண்ட வீதி விளக்கு உபகரணம் வழங்கலுக்காக மஹாவ பிரதேச சபை பொது நிதியில் நாற்பத்தாறாயிரத்து நூற்றி நாற்பத்தி ஆறு ரூபா இருபத்தி ஐந்து சதம் ( ரூபா 46,146.25 ) தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும் /அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

VIII. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் இது வரை மஹாவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.04.26 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் ஆர். எம். எல். கே. ராஜபக்ஷ அவர்களுக்கு மஹாவ பிரதேச சபையின் முறையான சபை நியதிகளுக்கு நேர்மாறாக பலல்ல பொது நூலகத்தையும் கன கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்காக திட்ட வரைபு வரைதல் மற்றும் மதிப்பீட்டை

அமைப்பதற்காக மஹவ பிரதேச சபை பொது நிதியில் எழுபத்தி ஆறாயிரத்தி நாநூற்றி எழுபத்தைந்து ரூபா (ரூபா 76,475.00 ) தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

2011.08.24 ஆந் திகதிய 1720/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள்.

i. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதியிலிருந்து மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.06.23 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்கு புனரமைப்பதற்காக வீதி விளக்கு உபகரணம் வழங்குவதற்காக மஹவ பிரதேச சபையின் முறையான சட்ட திட்டங்களுக்கு புறம்பாக 624 வவுச்சர் பத்திரம் மூலம் இலக்கம் 68, மெலிபன் வீதி, கொழும்பு - 11, சேசத் இலெக்ரிக் கம்பனி நிறுவனத்திற்கு மஹவ பிரதேச சபை பொது நிதியில் இருந்த 46,275 ரூபா தொகையை அல்லது அதற்கு அண்மித்த தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

ii. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.07.26 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபை முகாமைத்துவ உதவியாளர்/வேலைபார்க்கும் செயலாளர் ஐ. எம். சுவர்ணதிலகா என்பவருக்கு, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 219 (i) ஆம் பிரிவின் கீழ் வருகின்ற நிதி தொடர்பாக பிரதேச சபை பொது நிதியில் செலுத்துவதற்கு ஆரம்ப தேவைகளை பூர்த்தி செய்யாமல் இருக்கையில் கட்டளையிட்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

iii. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.07.26 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபையின் முகாமைத்துவ உதவியாளர்/ வேலைபார்க்கும் செயலாளர் ஐ. எம். சுவர்ணதிலகா என்பவருக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 219 (i) ஆம் பிரிவின் கீழ் வருகின்ற நிதி தொடர்பாக பிரதேச சபை பொது நிதியில் செலுத்துவதற்கு ஆரம்ப தேவைகளை பூர்த்தி செய்யாமல் இருக்கையில் கட்டளை இட்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

iv. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் மஹவ பிரதேச சபையின் அதிகாரப் பிரிவில் வீதி விளக்கு புனரமைப்பதற்காக மின் பண்டல் கேபல் 100 வழங்குவதற்காக சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 கொலனியல் இலெக்ரிகல் இக்விஜ்மன்ட் நிறுவனத்தினால் 29,500 ரூபா பில் பத்திரம் மஹவ பிரதேச சபையின் தலைவரின் பெயருக்கு கொடுக்கப்பட்டிருக்கையில் கொலனியல் இலெக்ரிகல் இக்விஜ்மன்ட் நிறுவனத்திற்கு மஹவ பிரதேச சபை பொது நிதியில் இருந்து செலுத்தாமல் மஹவ பிரதேச சபையின் சாரதி கே. எம். அருண புஸ்பகுமார என்பவருக்கு 2011.04.26 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் 436 ஆம் இலக்க வவுச்சரினால் 29,500 ரூபா தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 219 (i) ஆம் பிரிவின் கீழ் வரும்படி நிதி தொடர்பாக பிரதேச பொது நிதியில் இருந்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

V. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.07.13 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபையின் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்கு புனரமைப்பதற்காக வீதி விளக்கு உபகரணம் வழங்குவதற்காக மஹவ பிரதேச சபையின் முறையான சட்ட திட்டங்களுக்கு புறம்பாக 624 வவுச்சர் பத்திரம் மூலம் இலக்கம் 68, மெலிபன் வீதி, கொழும்பு - 11 சேசத் இலெக்ரிக் கம்பனி நிறுவனத்திற்கு 1,43,850 ரூபா தொகையை அல்லது அதற்கு அண்மித்த தொகையொன்றைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 174 ஆம் பிரிவிற்கு நேர்மாறாக நடவடிக்கை எடுத்ததினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம்

இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

vi. 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்று தொடக்கம் மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் 2011.07.13 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மஹவ பிரதேச சபையின் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்கு புனரமைப்பதற்காக வீதி விளக்கு உபகரணம் வழங்குவதற்காக மஹவ பிரதேச சபையின் முறையான சட்ட திட்டங்களுக்கு புறம்பாக 741, 742, 743 மற்றும் 744 வவுச்சர் பத்திரங்கள் மூலம் இலக்கம் 68, மெலிபன் வீதி, கொழும்பு - 11 சேசத் இலெக்ரிக் கம்பனி நிறுவனத்திற்கு 1,43,850 ரூபா தொகையை அல்லது அதற்கு அண்மித்த தொகையொன்றை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 174 ஆம் பிரிவிற்கு நேர்மாறாக நடவடிக்கை எடுத்ததினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 185 (1) (அ) மற்றும்/அல்லது 185 (1) (ஆ) மற்றும்/அல்லது 185 (1) (இ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

மஹவ பிரதேச சபையின் தலைவர் திரு. சேனாநாயக முதியன்சேலாகே பந்துல புஸ்பகுமார சேனாநாயக்க அவர்களுக்கு எதிராக மேற்கூறப்பட்ட குற்றங்களை பரிசீலனை செய்த ஓய்வுபெற்ற நீதிமன்ற நீதிவான் ஓ. டபிள்யூ. ஓ. பி. வீரசேன அவர்களினால் ஒருமுகப்படுத்தப்பட்ட பரிசீலனை அறிக்கைப்படி மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1717/18 ஆம் இலக்க மற்றும் 2011.08.03 ஆந் திகதிக்கான அதி விசேட வர்த்தமானிக்கு உட்படுத்தப்பட்ட ii, iv, v, vi, vii, viii ஆகிய குற்றங்களுக்கு மஹவ பிரதேச சபையின் தலைவர் திரு. சேனாநாயக முதியன்சேலாகே பந்துல புஸ்பகுமார சேனாநாயக குற்றவாளி என்றும், அது போன்று i, iii என்ற குற்றங்களுக்கு மஹவ பிரதேச சபையின் தலைவர் திரு. சேனாநாயக முதியன்சேலாகே பந்துல புஸ்பகுமார சேனாநாயக்க நிரபராதி என்று அனுமானிக்கப்பட்டுள்ளது. அது போன்று மேற்கூறப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1720/7 ஆம் இலக்க மற்றும் 2011.08.24 ஆந் திகதிக்கான அதி விசேட வர்த்தமானிக்கு உட்படுத்தப்பட்ட i, ii, iii, iv, v, vi ஆகிய குற்றங்களுக்கு மஹவ பிரதேச சபையின் தலைவர் திரு. சேனாநாயக முதியன்சேலாகே பந்துல புஸ்பகுமார சேனாநாயக குற்றவாளி என்றும் அனுமானிக்கப்பட்டுள்ளது.

உரிய எல்லா குற்றம் சம்பந்தமாக முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியும் தனியார் பரிசீலனை ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட முடிவு பற்றி ஆழமாக படித்த பின் அந்த அனுமானிப்புடன் நான் திருப்தியடைகின்றேன். இதன்படி திரு. சேனாநாயக முதியன்சேலாகே பந்துல புஸ்பகுமார சேனாநாயக மஹவ பிரதேச சபையின் தலைவராக இருக்கையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1717/18 ஆம் இலக்க மற்றும் 2011.08.03 ஆந் திகதிக்கான அதி விசேட வர்த்தமானிக்கு உட்படுத்தப்பட்ட ii, iv, v, vi, vii, viii ஆகிய குற்றங்களும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1720/7 ஆம் இலக்க மற்றும் 2011.08.24 ஆந் திகதிக்கான அதி விசேட வர்த்தமானிக்கு உட்படுத்தப்பட்ட i, ii, iii, iv, v, vi ஆகிய குற்றங்களுக்கு உரிய குற்றச் செயல்களை செய்ததனால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் சட்டத்தின் 185 (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 185 (1) அ, 185 (1) ஆ, 185 (1) இ, 185 (1) ஈ, பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல் செய்துள்ளது பற்றி நான் திருப்தியடைகின்றேன்.

அவ்வாறு திருப்தியடைந்த பின் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் இரண்டாம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 185 (1) (1) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 2012, யூலை மாதம் 10 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வண்ணம் திரு. சேனாநாயக முதியன்சேலாகே பந்துல புஸ்பகுமார சேனாநாயக மஹவ பிரதேச சபையின் நிர்வாகத் தலைவர் பதவியாகிய "தலைவர்" பதவியில் இருந்து விலக்கப்படுவதாக இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

அதுல விஜேசிங்ஹ,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், நீதி, சமாதானம்,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக, மனிதவள, கல்வியும்
கலாசார நடவடிக்கையும், காணி, சூழல், சுற்றுலா, முதலீடு, கூட்டுறவு
அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கல் அமைச்சரும்,
வட மேல் மாகாணம்.

முதலமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
2012, யூலை 10.

7-721

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.